# நாட்டார் வழக்காற்றியல் நோக்கில் பட்டப் பெயர்கள்

## (ஈழத்துத் தமிழ் நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

கி.விசாகரூபன்


**ஆய்வுச்சுருக்கம்**

*'நாட்டார் வழக்காற்றியல்' (Forkloe) என்ற புலமைத்துறை இன்று அனைத்துலகக் கல்விப்புலமாக வளர்ச்சி கண்டு வருகிறது. உலகின் பல்வேறு இனங்களும் தத்தமது தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களை நாட்டார் பண்பாட்டுக் கூறுகளில் இனங்கண்டு மீட்டுருவாக்கம் செய்து வருகின்றன. அந்த வகையில் இந்த ஆய்வுக்கட்டுரையானது பெயர்களுடன் தொடர்புடைய வழக்காறுகளில் மிகவும் முக்கியத்துவமான ஒரு கூறாக விளங்கும் பட்டப்பெயர்கள் உருவாக்கம்பெறும் அடிப்படைகள் குறித்து ஆராய்வதாக அமைகிறது.*


### 01. முன்னுரை

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுப்புலத்தில் பெயர்களுடன் தொடர்புடைய வழக்காறுகள் (Folklore related to names) மிகவும் முக்கியத்துவமுடையனவாக விளங்குகின்றன. பெயர்களுடன் தொடர்புடைய வழக்காறுகளில் மக்கட்பெயர்கள், உறவுமுறைப்பெயர்கள், பட்டப்பெயர்கள் (காரணப் பெயர்கள்), இடப்பெயர்கள் ஆகியன உள்ளடங்குகின்றன.

ஒரு சமுதாயத்தின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், நாகரிகம், நம்பிக்கை, கடவுட் கொள்கை, சமயச்சிந்தனைகள், அரசியல், சமுதாய மாற்றங்கள் முதலான பல்வேறு விடயங்களைப் பெயர்களுடன் தொடர்புடைய வழக்காறுகளின் வழி அறிந்துகொள்ளலாம்.

ஈழத்துத் தமிழ் நாவலாசிரியர்கள் பலரும் தமிழர்தம் நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் பலவற்றையும் ஒரு கருத்தியல் நோக்கில் தமது நாவல்களில் பதிவு செய்துள்ளதனை நோக்க முடிகின்றது. குறிப்பாகப் பிரதேசப் பண்புசார் நாவல்களில் இவ்வாறான ஆவணவாக்க முயற்சிகளைப் பரவலாகப் பார்க்க முடிகின்றது. எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைத் தொடர்ந்து வரும் சந்ததியினருக்கும் அவ்வாறே கையளிப்பது தொடர்பான ஒருவித பிரக்ஞையினை இந்த நாவல்களினூடாகக் கண்டுகொள்ள முடிகின்றது. அந்த வகையில் இக்கட்டுரையானது ஈழத்துத் தமிழ் நாவல்கள் சிலவற்றில் பயின்று வந்துள்ள பட்டப் பெயர்கள் (Nick Names) சிலவற்றின் இயல்புகள் குறித்து ஆராய்வதாக அமைகின்றது.

### 02 தமிழ் மரபில் பட்டப்பெயரீடும் வழக்கம்

ஆங்கில மரபில் பட்டப்பெயர்களை 'Nick Name' என்ற சொற்தொடரால் குறிப்பிடுவர். இச் சொல்லுக்குத் தமிழ் மரபில் நிந்தைப் பெயர், மாறுபெயர், விளையாட்டுப் பெயர், பரிகாசப் பெயர் முதலாகப் பல்வேறு பொருண்மைகள் சுட்டப்படுகின்றன.[1]

தமிழில் பட்டப்பெயர் வழங்கும் மரபு பண்டைக் காலம் தொட்டே இருந்து வந்துள்ளது.

அவரவர்க்குரிய சில விசேட தன்மைகள், உடல் தோற்றம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு இப்பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியர், 'பாலறிவந்த உயர்திணைப் பெயர்கள்' பற்றிக் குறிப்பிடும் நூற்பா ஒன்றில் பட்டப் பெயர்களாகக் (காரணப்பெயர்) கருதக் கூடிய பெயர்கள் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளார்[2] மேற்படி நூற்பாவுக்கு உரை செய்த சேனாவரையர் மேற்குறித்த பெயர்களெல்லாம் ஏதோ ஒரு 'நிமித்தம்' பற்றியே அமைவன எனக் குறிப்பிடுவதும் இவ்விடத்தில் கருதத்தக்க தாகும்.[3]

உ.வே. சாமிநாதையர் பண்டைத்தமிழ்ப் புலவர் பெயர்களிற் சில காரணப் பெயர்களாக அமையுமாற்றைச் சுட்டிக்காட்டியுள்ளார். காக்கைபாடினியார், கயமனார், ஒரேருழவர், கள்ளிலாத்திரையனார் முதலான பெயர்கள் அவற்றில் சிலவாகும்.[4]

ருஷ்ய அறிஞரான விதாலிஃபுர்னீக்கா, அ.துரையரங்கனார் முதலானோரும் சங்ககாலப் பகுதியிலே பட்டப்பெயர்கள் (காரணப் பெயர்) வழக்கில் இருந்தமை குறித்து விரிவாக எடுத்துக்காட்டியுள்ளனர்.[5]

## 03. பட்டப்பெயர்கள் பயின்றுவரும் அடிப்படைகள்

பட்டப் பெயர்கள், மக்களின் தோற்றம், பண்பு, தொழில், செயல்கள், வாழ்விடம், வாழ்ந்த இடம், நம்பிக்கைகள் முதலான பல்வேறு விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறுகின்றன. இப்பெயர்கள் ஒரே இயற்பெயருடைய இருவரை வேறுபடுத்தி உணர்ந்து கொள்வதற்காகவும், ஒருவரைக் கேலி செய்வதற்காகவும், ஒருவரைப் பற்றி மறைமுகமாகப் பேசுவதற்கும் எனப் பல்வேறு நிலைகளில் பயன்படுகின்றன.

பட்டப் பெயர்கள் மனிதனுடைய ஆளுமையினையும், அவனுடைய இயல்புகளை யும் காட்டுவனவாக மட்டுமன்றிச் சமுதாயத்தின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பண்பாடு முதலானவற்றையும் வெளிப்படுத்த வல்லன வாகவும் அமைந்துள்ளன.

## 04. நாவல்களில் பட்டப்பெயர்கள்.

ஈழத்துத் தமிழ் நாவல்களில் பல்வேறு வகைப்பட்ட பட்டப் பெயர்கள் பயின்று வந்துள்ளமையினைப் பார்க்க முடிகின்றது. ஈழத்தின் பிரபல்யமான நாவலாசிரியர்களான கே.டானியல், செங்கையாழியான் முதலானோர் யாழ்ப்பாணத்துத் தமிழ்ச்சமுகத்தினரிடையே வழங்கும் பல்வேறு வகைப்பட்ட பட்டப்பெயர்க ளைத் தமது நாவல்களிலே மிகக் கச்சிதமாக ஆவணப்படுத்தியுள்ளனர். நாட்டுப்புற மக்களின் புலமைத்திறனுக்கும் உவமைகூறும் ஆற்றலுக்கும் உரைகல்லாக அமையும் இப்பெயர்களை அவற்றின் தன்மை நோக்கி,

- அ) தோற்றம் குறித்த பட்டப் பெயர்கள்.
- ஆ) பண்பு குறித்த பட்டப் பெயர்கள்.
- இ) தொழில் குறித்த பட்டப் பெயர்கள்.
- ஈ) செயல் குறித்த பட்டப் பெயர்கள்.
- உ) ஊர்குறித்த பட்டப் பெயர்கள்.
- ஊ) சாதி குறித்த பட்டப் பெயர்கள்.

என வகைப்படுத்தி அணுகமுடிகின்றது.

### 4.1 தோற்றம் குறித்த பட்டப் பெயர்கள்

தோற்றம் குறித்த பட்டப் பெயர்களை உடல் உறுப்புக்களுடன் தொடர்புடையன, (Body Parts, Physical Handicapped) நிறத்துடன் தொடர்புடையன, உருவத்துடன் தொடர்புடை யன என மூன்று வகையாகப் பகுத்துப் பார்க்கலாம்.

### 4.1.1 உடல் உறுப்புக்கள் குறித்த பட்டப்பெயர்கள்.

உடல் உறுப்புக்கள் இயல்புக்கு மாறான தன்மையில் அமைந்திருந்தாலோ, இல்லாமல் இருந்தாலோ அல்லது உறுப்புக்களின் எள்ளல் தன்மை கொண்ட தோற்றத்தினாலோ இவ்வகையான பட்டப்பெயர்கள் தோன்றுகின்றன. இவ்வகைப் பெயர்கள் உறுப்புக்களின் பெயர்களோடு பால்விகுதி பெற்றோ அல்லது அதே வகையான தோற்றம் கொண்ட மிருகங்களோடும் பிற பொருட்களோடும் தொடர்புபடுத்தியோ அமையலாம்.[8]

"கொத்தியின் காதல்" என்ற நாவலில் வழக்கத்துக்கு மாறாக நீண்ட பற்களின் அமைப்புக் கொண்டவரின் பற்களை எருமையின் பற்களின் அமைப்புடன் தொடர்புபடுத்தி அவர் "எருமைப்பல்லன்" என்ற காரணப்பெயர் கொண்டு குறிக்கப்படுகின்றார்.[7]

கே.டானியலின் நாவல்களான "பஞ்சமர்", "கோவிந்தன்" ஆகிய நாவல்களில் வருகின்ற "செவிட்டு ஐயர்", "கொத்திச்சட்டம்பி", "செவிட்டுச் சாத்திரி" முதலான பட்டப் பெயர்கள் உடல் ஊனத்துடன் தொடர்புடைய வர்களைக் கேலி செய்வனவாகப் பயின்று வந்துள்ளன.[8]

"அடிமைகள்", "கானல்" ஆகிய நாவல்களில் வருகின்ற "பறட்டைத்தலைப் பெரியதம்பி", "பெருங்குடும்பி ஐயர்" முதலான பட்டப் பெயர்கள் தலைமுடியின் அமைப்புடன் தொடர்புபட்டுள்ளன.[9] எண்ணெய் தேய்த்து முறையாக வாரப்படாத தலை முடியினையுடைய வரை நாட்டுப்புறவழக்கில் "பறட்டைத்தலையன்" எனக் குறிப்பிடுவது வழக்கமாகும். "பற்றைத்தலையன்" என்பதன் திரிபாக இப்பெயர் அமைந்திருக்கலாம்.

"தண்ணீர்" என்ற நாவலில் உடம்பெல்லாம் பொருக்குகள் படிந்தவனாகச் சித்தரிக்கப்படுபவன், "சொடுகன்" என்ற பட்டப்பெயர் கொண்டு குறிக்கப்படுகிறான்.[10] "சொடுகு" என்பது "பொடுகு" என்பதன் திரிபாக இருக்க வேண்டும்.

"தண்ணீர்" என்ற நாலலில் வரும் நல்லதம்பி என்ற பாத்திரத்தினைக் கேலி செய்வதற்கும், அவர் அறியாமலே அவரைப் பற்றி மறைமுகமாகக் கதைப்பதற்கும் "தூங்கல் கண்ணர்", "இறங்கல் கண்ணர்", "ஒத்தைக் கண்ணர்" ஆகிய பட்டப் பெயர்கள் வழங்கி வந்துள்ளன.[11] இப்பெயர்கள் மாறுகண் அமைப்பைக் கொண்ட ஒருவரைக் குறிக்கப் பயின்று வந்துள்ள ஒரே பொருள் குறித்த பல்வேறு பட்டப் பெயர்களாக உள்ளன. இவற்றில் "தூங்கல் கண்ணர்", "இறங்கல் கண்ணர்" ஆகிய பெயர்கள் கீழ்நோக்கிய அமைப்பும், பார்வையும் கொண்ட கண்களையுடையவரைக் குறிப்பனவாக உள்ளன.

### 4.1.2 நிறம் குறித்த பட்டப் பெயர்கள்.

"மீட்டாத வீணை" என்ற நாவலில் வரும் இளங்கோ என்பவன் இயல்பான வெள்ளை நிறத்திலும் பார்க்க கூடுதலான வெள்ளை நிறமுடைய வனாக இருக்கும் காரணம் பற்றி "அவிச்சறால்" என்ற பட்டப்பெயரினால் குறிக்கப்படுகின்றான்.[12]

"அடிமைகள்", "கானல்", "பஞ்சகோணங்கள்" முதலான நாவல்களிலே கறுப்பு நிறமுடையவர்களைக் குறிக்கப் பல்வேறு

பட்டப்பெயர்கள் வழங்கி வந்துள்ளன. கரடி ஆறுமுகன், கறுத்தான், நல்லெண்ணைக் கறுப்பி, கறுவல் கட்டையன், கறுவல் வைத்தி லிங்கம் முதலியன அவற்றுள் சிலவாகும்.

"பஞ்சகோணங்கள்" என்ற நாவலில் வரும் விசாலாட்சி அம்மாவின் நிறத்தினையும், அவளின் கணவனின் நிறத்தினையும் எள்ளி நகையாடுவதாக அமையும் பகுதி வருமாறு,

" விசாலாட்சி அம்மாள் கறுப்பி அல்ல. நல்லெண்ணைக் கறுப்பி என்று வேண்டுமானால் சொல்லலாம். இவரை அவளோடு ஒப்பிடும் போது, கழுவின நெருப்புத்தணல் போல என்று கூறிவிடலாம்."

### 4.1.3 உருவம் குறித்த பட்டப்பெயர்கள்.

உடலின் பகுதிகளாலன்றி ஒட்டு மொத்த உருவத்தினையும் கொண்டு அவ்வுருவோடு ஒப்புமையுடைய பொருட்களை ஒப்பிடுவதன் மூலம் தோற்றம் பெறும் பட்டப் பெயர்களாக இவ்வை பயின்றுள்ளன.

"மீட்டாத வீணை", "பஞ்சகோணங்கள்", "முற்றத்து ஒற்றைப்பனை" ஆகிய நாவல்களிலே வரும் "பேத்தைவல்லி", ' பேத்தை வயித்தியன்" "குண்டான் கோபால்" முதலான பட்டப் பெயர்கள் தொந்தி (வயிறு) பெருத்தவர்களைக் குறிக்கும் பட்டப் பெயர்ளாகப் பயின்றுள்ளன.

தவளை, மீன் இனங்களில் "பேத்தை" என்றொரு வகையுண்டு. இவ்வகை உயிரினங்க ளின் வயிற்றுப் பகுதியானது எந்நேரமும் உப்பிப் பெருத்துக் காணப்படும், நாட்டுப்புற வழக்கில் பேத்தைமீன், பேத்தைத் தவளைகள் என்பவற்றை அறியாதார் இல்லைஎன்றே குறிப்பிடலாம். அந்த அளவுக்கு இவை நன்கு பரிச்சயமானவை. எனவே தொந்தி பெருத்தவர் களுக்கு இவை உவமைகளாக அமைந்துள்ளன.

"முற்றத்து ஒற்றைப் பனை" என்ற நாவலிலே "பேத்தை வல்லி" என்ற பட்டப் பெயரின் பொருத்தப்பாடு பற்றி வருகின்ற விவரணம் வருமாறு.

"பேத்தை வல்லி என்று வண்ணார் பண்ணையில் செல்லமாக அழைக்கப்படும் வல்லிபுரத்தைப் பற்றிச் சிறிது சொல்ல வேண்டும். பனங்கள்ளையும் தென்னங்கள் ளையும் முட்டிமுட்டியாகக் குடித்ததனால் வயிறு பொங்கல் பானை போல முன்னால் தொங்கியது. வெண்மண்டை, கால்களும், கைகளும் மிக மெலிந்தவை பெயரும் வலு பொருத்தம்"

"பஞ்சமர்" என்ற நாவலில் வரும் மாமூட்டையர், "இருளின் கதிர்கள்" என்ற நாவலிலே வரும் "எலும்பர்" முதலானவையும் ஒட்டுமொத்த உருவைக்கேலி செய்யும் வகையில் அமைந்த பட்டப் பெயர்களாகவே உள்ளன.

"பஞ்சமர்", "அடிமைகள்", "பஞ்சகோணங் கள்" ஆகிய நாவல்களிலே உருவில் சிறுத்தவர் களைக் குறிக்கும் வகையில் கட்டைஜயர், கட்டைப்புட்டு, பொடிலன் சுப்புறு, காக்கொத்தர், கட்டைச்சி முதலான பட்டப் பெயர்கள் பயின்று வந்துள்ளன. "பொடி" என்ற சொல் நாட்டுப்புற வழக்கில் "சிறிய" என்ற பொருண்மையில் வழங்கி வருதல் குறிப்பிடத்தக்கதாகும்.

உருவத்தை கேலி செய்தலும், எள்ளி நகையாடுதலும் நாட்டுப்புற மக்களிடையே பெரும்பான்மை வழக்காக உள்ளது. நாவல் களில் இவ்வழக்கம் குறித்த சித்திரிப்பு இயல்பாக அமைந்துள்ளது. தோற்றம் குறித்த பட்டப்பெயர்

கள் நாட்டுப்புற மக்களின் கூர்மையான அறிவுத்திறத்தையும், ஒப்புவமைப்படுத்தும் ஆற்றலையும் அவர்தம் நகைச்சுவையுணர் வையும் பிரதிபலிக்கின்றனவாக அமைந்துள் ளன.

### 4.2 பண்பு குறித்த பட்டப் பெயர்கள்.

மக்களின் பல்வேறு விதமான பண்புகளைக் குறிக்கும் படியான பட்டப் பெயர்கள் இவ் வகைப்பாட்டினுள் அடங்கும்.

"பஞ்சகோணங்கள்" என்ற நாவலில், ஊரில் உள்ள புதினங்களையெல்லாம் தன்னுடைய நுனி நாக்கிலே வைத்திருப்பவ ளான செல்லியைப் பூதி என்பவர் "விடுப்புப்பிடு ங்கி" என்ற பட்டப் பெயரால் குறிப்பிடுகின்றார்.[19] இவ்வகைப் பண்பு படைத்தவர்கள் எந்த நேரமும் விடுப்புப் (புதினம்) பிடுங்குவதிலேயே குறியாக இருப்பர். சாதாரணமாக உரையாடினாலும் அவ்வுரையாடலினூடே பல்வேறு "விடுப்புக் களை" இவர்கள் சேகரித்துக் கொள்வது வழக்கமாகும்.

"முற்றத்து ஒற்றைப்பனை" என்ற நாவலிலே எந்நேரமும் பொருளற்றுப் பிதற்றித் திரியும் காசிநாதர் என்பவரைக் குறிக்க "அலம்பல்காசி" என்ற பட்டப்பெயர் பயின்றுள்ளது.[20]

"அடிமைகள்", "போராளிகள் காத்திருக் கின்றனர்" ஆகிய நாவல்களிலே உலக நடப்புக் களைப் பற்றிய விளக்கம் குறைந்தவர்களையும் பிறர் எள்ளும் படியான நடையுடை பாவனை களைக் கொண்டவர்களையும் குறிக்கும் வகையில் "வெருளிக்கந்தன்", "பேயன்" முதலான பட்டப் பெயர்கள் வழங்கியுள்ளன.[21]

"அடிமைகளிலே" வருகின்ற வெருளிக்கந் தன் என்பவன் உலகம் பற்றிய அறிவு இல்லாதவனாகவும் எந்நேரமும் மூக்கில் சளியும் தலையில் எண்ணெயும் வழிந்தோடக் காட்சி தருபவனாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளான்.

எவ்வெப் பண்புகள் சமூகத்தின் மதிப்புக்கும், கேலிக்கும், வெறுப்புக்கும், உள்ளானவைகளாக இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் பண்பு குறித்த பட்டப் பெயர்கள் மூலம் அறிந்து கொள்ளமுடியும், இதன் மூலம் ஒருவர் தம்மைச் சுய மதிப்பீடு செய்து சமூகம் ஏற்றுக் கொள்ளும் வகையில் தம்மை மாற்றிக் கொள்ள வாய்ப்பு உள்ளது.

### 4.3 தொழில் குறித்த பட்டப் பெயர்கள்.

ஒருவர் செய்யும் தொழிலைக் கொண்டு அமையும் பட்டப் பெயர்கள் அனைத்தும் இவ்வகையினைச் சார்ந்தனவாகும்.

"முருங்கையிலைக்கஞ்சி" என்ற நாவலில் வருகின்ற ஆறுமுகம் என்பவர் வயற்காடுகளில் உள்ள பயிர்களை நாசம் செய்யும் அகிளானை அதன் சுவடு தேடிக் கண்டு பிடித்து அழிப்பதில் வல்லவர். இதனால் "அகிளான் ஆறுமுகம்" என்ற பட்டப் பெயர் கொண்டு அவர் குறிப்பிடப்பட்டுள்ளார். ஆறுமுகத்தாருக்கு இப்பட்டப்பெயர் வந்த வரலாறு குறித்து கே.டானியல் பின்வருமாறு விவரிக்கின்றார்.

"இவருக்கு அகிளான் ஆறுமுகம் என்ற பட்டப்பெயர் வந்தது ஒரு கதையல்ல. ஆனால் அந்தப்பட்டம் பெரிதாகி அவருடன் தொற்றிக் கொண்டு விட்டது. தோட்டத்தில் எங்கேயாவது ஒரிடத்தில் அகிளான் புற்றுவாயில் அரிமண்ணுடன் கிடந்து விட்டால் ஒரு கண்டிலும் நோப்படாமல் அந்தப் புற்றுப் போகும் வழிகளைக் கிளைகிளையாக வகிர்ந்து வகிர்ந்து அகிளான் வெடிப்புற்றுக்கால் எங்கு சென்றாலும்

அதைக் கொன்று விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார். இதுதான் ஆறுமுகத்தாருக்கு "அகிளான் ஆறுமுகம்"என்று பெயர் வந்த சிறுகதையா கும்."[22]

"முற்றத்து ஒற்றைப்பனை" என்ற நாவலில் பட்டங்களில் (காற்றாடி) ஒரு வகையான "கொக்குப் பட்டத்தினை" வடிவமைப்பதில் வல்லவரான மாரிமுத்தர் என்பவரைக்குறித்து "கொக்கர் மாரிமுத்தர்" என்ற பட்டப்பெயர் பயின்றுள்ளது.

கொக்கு என்பதுடன் "அர்" என்ற மரியாதைப் பன்மை விகுதியும் சேர்ந்து "கொக்கர் மாரிமுத்தரான" பின்னணியினைச் செங்கையாழியான் பின்வருமாறு விபரிக்கின்றார்.

"மாரிமுத்தர் அம்மானைத் தெரியாதவர்கள் வண்ணார்பண்ணையில் கிடையாது. "கொக்கர் மாரிமுத்தர்" என்றால் வயது போன யாவருக்கும் அவர் யார் என்று தெரிந்துவிடும், காற்றாடி கட்டி ஏற்றுவதில் மாரிமுத்தரை எவரும் மிஞ்சி விட முடியாது. சிறு வயதில் இருந்தே விதம் விதமான காற்றாடிகளைக் கட்டி சோளகக் காற்றிலே பறக்க விட்டிருக்கிறார். எழுபது வயதாகியும் காற்றாடி விடுகின்ற அந்தப்பழக்கம், வெறி தீரவில்லை. கொக்குக் கொடி கட்டுவதில் மாரிமுத்தர் வெகுதிறமைசாலி. ஆளும் ஆறரை அடி உயரம் அதனால் கொக்கர் என்ற பட்டமும் அவரது பெயரோடு ஒட்டிக் கொண்டது."[23]

" அடிமைகள்" என்ற நாவலில் வரும் "சாவல் பண்டாரியன்"என்பவர், சேவலகளைச் சண்டைக்கு ஏற்ற வகையில் பயிற்றுவிப்பதில் வல்லவனாகக் குறிக்கப்படுகின்றார்."[24]

"பஞ்சமர்" என்ற நாவலில் இறந்தோர் உடல்களைச் சுடலை வரை சுமப்பதை ஒரு காலத்தில் தமது குலத் தொழிலாகக் கொண்டிருந்த "கோவியர்" என்ற சமூகப்பிரிவு மக்களைக் கேலி செய்யும் பட்டப்பெயராக "சவந்தூக்கியள்" என்பது பயின்றுள்ளது.[25]

"பஞ்சமர்" என்ற நாவலிலே வரும் கோர்வைதள்ளி, கரையார்; நீர்க்காகங்கள், சாம்பான், பரியாரியார் முதலான பட்டப் பெயர்கள் தொழிலை அடிப்படையாகக் கொண்டனவாகப் பயின்றுள்ளன. இப்பெயர்களின் பொருத்தப்பாடு குறித்து கே.டானியல் பின்வருமாறு விவரித்துள்ளார்.

"முந்திச் சில இடங்களிலே கணவதியாற்ற ஆக்களை "கோர்வைதள்ளி" எண்டு கூப்பிட்டு இருக்கினம். அதுவும் சிலவேளை கோர்வைப்புல்லுமாதிரி மயிரை வெட்டியதாலை பொருத்தமாயிருக்கும்"[26]

"இஞ்ச சந்தியாவர் இருக்கிறார் அவற்ற ஆக்களைப் பொதுவில "கரையான்" எண்டு சொல்லுகினம். அவை தண்ணீக்க இறங்கி தொழில் செய்யிறபடியால் கரையார் எண்டு பேர் வைச்சிருப்பினும் தான். ஆனா அதை விடவும் அவைக்கு வேற ஒரு பேர் முந்தி இருந்திருக்கு. நீர்க்காகங்கள் எண்டு அவைக்கு ஒரு பட்டப்பேர் வைச்சு முந்திக் கூப்பிட்டிருக்கினம்......"[27]

" இஞ்ச பாரும் சின்னாற்ற ஆக்களைக் கூப்பிடுறதுக்கு ஒரு காரணமாவது இருக்கு. அவை மேளத்தைச் சாம்பிச் சாம்பி அடிக்கிறதாலை சாம்பான் . எண்டு பேர் வைச்சிருப்பினம்........."[28]

"கணபதியார் மயிர் வெட்டிற அம்பட்ட ஆள், நீ வைத்தியம் பார்க்கிற படியா உம்மைப் பரியாரியர் எண்டு சொல்லுறம்....... "29

"தண்ணீர்" என்ற நாவலில் வரும் "கரக்குட்டான்",[30] "பஞ்சகோணங்களிலே வரும் "பிளாச்சுப்பன்"[31] "அடிமைகளில்" வரும் "சிலம்படிரெத்தினம்"[32] முதலான பட்டப் பெயர்களும் தொழில் குறித்த பட்டப் பெயர்களாகவே பயின்றுள்ளன.

தொழில் குறித்த பட்டப்பெயர்கள் சமூகத்தில் பல்வேறு விதமான பட்டப் பெயர்கள் தோன்றுவதற்கு "களம்" அமைத்துக் கொடுத்தன. இப்பெயர்களே பின்னாளில் சாதி குறித்த பட்டப் பெயர்களுக்கும் அடிப்படைகளாகவும் அமைந்தன எனலாம்.

## 4.4 செயல் குறித்த பட்டப் பெயர்கள்.

ஒருவர் செய்யும் செயல்களை அடிப்படையாகக் கொண்டும் பட்டப் பெயர்கள் அமைவதுண்டு. இச் செயல்கள் சமூகத்தின் பார்வையில் கேலிக்குரியனவாகவோ வினோதமானவையாகவோ, சிறந்தனவாகவோ இருக்கலாம்.

நாட்டுப்புற வழக்கில் ஒருவர் உண்ணும் உணவு வகைகளைக் கொண்டு அவரின் சமூக மதிப்பைப் பற்றிப் பேசுகின்ற வழக்கம் பரவலாகக் காணப்படுகின்றது.

"கோவிந்தன்" என்ற நாவலிலே வரும் "இறால் தின்னிக்கரையார்"[33] "பஞ்சமரிலே" வரும் "கீளிதின்னி விதானை"[34] "பஞ்ச கோணங்கள்", "பஞ்சமர்" ஆகிய நாவல்களிலே வரும் "வால்ஒடியல்தின்னி", "வாலொடியால் வல்லிபுரம்"[35] ஆகியன எல்லாம் அவர்கள் உண்ணும் உணவு வகைகளின் தரத்தினைச் சுட்டிக் கேலி செய்வனவாக உள்ளன்.

"கானல்" என்ற நாவலிலே பனம்பழத்தின் சாற்றினை உணவாகக் கொள்ளும் பூக்கண்டர் "பினாட்டுத்தின்னிப் பூக்கண்டன்"[36] எனவும் மாடு, நீர்க்காகம் முதலானவற்றை உணவாக உட்கொள்ளும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தோர் "மாடு தின்னி வேதக்காரர்", "காகம் தின்னிக் கரையார்" என்றெல்லாம் பட்டப் பெயர் கொண்டு குறிக்கப்பட்டுள்ளனர்.[37] இந்து மதத்தவர் பார்வையில் மாடு, நீர்க்காகம் முதலியனவற்றை உட்கொள்வது இழிசெயலாகப் பார்க்கப் படுவதனை இந் நாவல் புலப்படுத்தியுள்ளது.

"மையக்குறி" என்ற நாவலில் வரும் "அப்பச்சட்டியர்"[38] "கோவிந்தன்" என்ற நாவலில் வரும் "புக்கை தின்னிப் பிராமணி"[39] முதலானவையும் மேற் குறித்த செயல்களைக் கேலி செய்யும் பட்டப் பெயர்களேயாம்.

"பஞ்சமர்" என்ற நாவலிலே எவ்வித இலக்குமின்றி கண்ட கண்ட வீடுகளில் உண்டும், உறங்கியும், திரியும் பாத்திரமாகச் சித்திரிக்கப்படுகின்ற "ஐயாண்ணர்" "கண்ட வீடுதூங்கி", "கண்டவீடுதின்னி" என இழித்துரைக்கப்பட்டுள்ளார்.[40]

"பஞ்சமர்" என்ற நாவலிலே வரும் "பால்குடிச் சண்முகம் பிள்ளையின்" பட்டப் பெயர் வரலாறு பின்வருமாறு, அமைந்துள்ளது.

"சுமார் மூன்று வயது வரை சண்முகம் பிள்ளை பொன்னியைக் கலைத்துக் கலைத்துப் பால் குடித்தது ஐயாண்ணனுக்கு நல்ல நினைப்பு. மூன்று வயது வரை இப்படி பால் குடித்து வந்ததனால்தான் வேடிக்கையாக "பால்குடி" என்ற பெயரும் இலேசாக சண்முகம்பிள்ளையுடன் ஒட்டிக் கொண்டது.[41]"

"கானல் என்ற நாவலில் வரும் "கும்பிடு கள்ளர்" என்ற பட்டப் பெயர் கும்பிட்டுக்

கும்பிட்டே காரியம் பார்க்கும் குறிப்பிட்ட பகுதியினரைக் கேலி செய்வதாகப் பயின் றுள்ளது."[42]

செயல் குறித்த காரணப் பெயர்கள் சமுதாயத்தின் வெறுப்புக்கும், கேலிக்கும், பாராட்டுக்கும் உரிய செயல்களைப் பிறர்க்கு உணர்த்துவனவாக அமைந்துள்ளன.

### 4.5 ஊர் குறித்த பட்டப் பெயர்கள்.

ஊரின் பெயரினைக் கொண்டு அமைகின்ற பட்டப்பெயர்கள் இவையாகும். குறித்த சில ஊர்களின் சிறப்புக்களை, சிறப்பின்மைகளை உணர்த்துவனவாகவும் இப் பட்டப் பெயர்கள் அமைகின்றன.

"கானல்" என்ற நாவலில் வரும் "கொட்டடிக் கறுத்தார்", "குளப்பிட்டிக் கணேசன்", "தட்டாதெரு பொன்னுச்சாமி", "வண்ணார் பண்ணை நமச்சிவாயம்" [43] மற்றும் "அடிமைகள்" என்ற நாவலில் வரும் "நவாலி வீரசிங்கன்", "கொக்குவில் கொட்டப்பெட்டி ஆறுமுகத்தார்", "பண்டாரக்குளத்தடிமுத்தன்"[44] ஆகிய பட்டப் பெயர்களும் ஊர்களை அடிப்படையாகக் கொண்ட பட்டப்பெயர்களாகும்.

### 4.6 சாதி குறித்த பட்டப் பெயர்கள்.

ஒருவர் சார்ந்துள்ள சமூகப் பிரிவினை அடிப்படையாகக் கொண்டும் பட்டப்பெயர் வழங்கப்படுகின்றது.

"கோவிந்தன்" என்ற நாவலிலே பயின்று வரும் "கொல்லச்செல்லத்துரை" "துரும்ப மிக்கேல்", "கட்டாடிக்கந்தையர்" முதலான பட்டப் பெயர்கள் முறையே கொல்லர், அம்பட்டர், துரும்பர், வண்ணார், கட்டாடி ஆகிய சமூகப் பிரிவுகளை முன் அடைகளாகக் கொண்ட பட்டப் பெயர்களாகும்.[45]

வட்டார வழக்கு நாவல்களிலே சாதி குறித்த பட்டப் பெயர்கள் பரவலாகப் பயன்று வந்துள்ளன.

**முடிவுரை :**

ஈழத்துத் தமிழ் நாவல்கள் தமிழ் மக்களிடையே வழக்கில் இருந்து வரும் பல்வேறு வகையான பட்டப் பெயர்களையும் அவை வழங்கி வரும் இயற்கைச் சூழல்களோடு ஆவணப்படுத் யுள்ளன.

தோற்றம், பண்பு, தொழில், செயல், சாதி முதலானவற்றை அடிப்படைகளாகக் கொண்ட மைந்துள்ள இப்பட்டப்பெயர்கள், குறித்த சமூகத்தினது பண்பாட்டின் பல்வேறு முகங்களையும் வெளிப்படுத்துவனவாகவும், நாட்டுப்புற மக்களின் உவமை கூறும் ஆற்றல், நகைச்சுவையுணர்வு மற்றும் புலமைத்திறன் ஆகியவற்றை எடுத்துக் காட்டுவனவாகவும் விளங்குகின்றன. ஈழத்துத் தமிழ் மக்களிடையே வழக்கில் இருந்து வரும் பட்டப் பெயர்களைத் தொகுக்கும் முயற்சியானது தமிழர் தம் பண்பாட்டு மானிடவியல் ஆய்வுக்குப் பெரிதும் துணை செய்வதாக அமையும்.

# அடிக்குறிப்புக்கள்


1 **The Great Lifco Dictionary, English - English - Tamil,** The Little Flower Co., Chennai, 2000 ; . P.65.

2 **தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையருரை,** கழக வெளியீடு, சென்னை, 1962, நூற்பா – 165.

3 மேலது, உரை, பக் 119 – 120.

4 சாமிநாதையர். உ.வே; முன்னுரை, குறுந்தொகைப்பதிப்பு, சென்னை, 1937 , பக் 3–5.

5 விதாலிஃபுர்னீக்கா; **பிறப்பு முதல் இறப்புவரை,** நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை, 1986,

துரை அரங்கசாமி, மொ..அ; **சங்ககாலச் சிறப்புப் பெயர்கள் (இலக்கிய சிறப்புப் பெயர்களும் குடிபற்றிய சிறப்புப் பெயர்களும்),** பாரி நிலையம், சென்னை, 1980.

6 இராமநாதன்; **ஆறு நாட்டுப்புற இயல் ஆய்வுகள்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997, ப–280.

7 செங்கையாழியான்; **கொத்தியின் காதல்,** மாணிக்கப்பிரசுரம், கொழும்பு, 1975, ப –7.

8 டானியல்,கே; **கோவிந்தன்,** கார்க்கி நூலகம், சென்னை,1982; . ப – 50.

டானியல்.கே; **பஞ்சமர்,** அலைகள் வெளியீட்டகம், சென்னை, 1994 : . ப –169

9 டானியல்.கே; **அடிமைகள்,** தோழமைப்பதிப்பகம், குடந்தை, 1984, ப – 150.

டானியல்.கே; **கானல்,** பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு, கொழும்பு, 1993, பக். 10–29.

10 டானியல்.கே; **தண்ணீர்,** வராவொல்லை வெளியீடு , பருத்தித்துறை, 1987, ப – 110.

11 மேலது, பக் 184, 186, 210, 216.

12 நித்தியகீர்த்தி, ஏ.ரி; **மீட்டாத வீணை,** கமலா வெளியீடு, பருத்தித்துறை, 1974, ப –16.

13 அடிமைகள், பக் 159, 162.

கானல், ப – 97.

டானியல்.கே; **பஞ்சகோணங்கள்,** விடியல் பதிப்பகம், கோவை, 1993, பக். 24,29.

14 பஞ்சகோணங்கள். ப – 29.

15 மீட்டாதவீணை. ப – 16.

பஞ்சகோணங்கள். பக். 35,40.

**செங்கையாழியான் நாவல்கள்;** (இந்த நாடு உருப்படாது, பிரளயம், முற்றத்து ஒற்றைப் பனை, கிடுகுவேலி, மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து, ஒரு மைய வட்டங்கள்), கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம், 1992, . ப – 40.

16 முற்றத்து ஒற்றைப்பனை, ப – 40.

17 பஞ்சமர், ப –153.

டானியல்.கே; டானியலின் குறுநாவல்கள், முருங்கையிலைக்கஞ்சி, மையக்குறி, இருளின் கதிர்கள், வராவொல்லை வெளியீடு, பருத்தித்துறை, 1989, ப – 202.